RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt24310

OPEN ACCESS

# பெரியபுராணத்தில் பெண்களின் நிலை

**மி. கேத்ரீனா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600002, தமிழ்நாடு, இந்தியா.

# Women in Periyapuranam

**M. Katrina [a, *]**

[a] Department of Tamil, Quaid-E-Millath Government College for Women (Autonomous), Chennai-600002 Tamil Nadu, India

* Corresponding Author: katrinamkl@gmail.com

Received: 26-03-2024
Revised: 03-07-2024
Accepted: 08-07-2024
Published: 17-07-2024

Check for updates

**ABSTRACT**

Men and women were equal in the Sangam period. Women occupied a specific position in Sangam period due to their qualifications, valor and morals. Therefore, women were privileged not only in the household but also in education. Many songs were sung by female poets. As they excelled in education they gave advice to king. They have shown themselves to be independent and courageous as ambassadors. The Periyapuranam is the twelfth of the twelve Thirumarai. Periyapuranam was composed by Sekizhar. This book is a historical archive of sixty-three Nayanmars and nine Thogaiadiyars who lived in different regions. This article is about how women's life is depicted in two stages in this book.

**Keywords:** Periyapuranam, Nayanmars, Thogaiadiyars, Morals

## முன்னுரை

பெரியபுராணம் பன்னிரு திருமுறைகளில் பன்னிரெண்டாவது திருமுறையாக உள்ளது. பெரியபுராணம் சேக்கிழாரால் இயற்றப்பட்டது. பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்கள் மற்றும் ஒன்பது தொகையடியார்களைப் பற்றி கூறும் வரலாற்றுக் களஞ்சியம் இந்நூல். இதில் இரண்டு நிலைகளில் பெண்களை எவ்வாறு காட்டப்பட்டுள்ளன என்பதை இந்நூலின் வாயிலாக ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பெண்களின் தகுதி

சங்ககாலத்தில் ஆண், பெண் சமமாகவும். கல்வியறிவில் தான் பெற்ற தகுதியினாலும், வீரத்தாலும், ஒழுக்கத்தாலும் சங்க காலத்தில் அவர்களுக்கென தனியிடம் இருந்ததை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. எனவே பெண்கள் இல்லறத்தில் மட்டுமின்றி கல்வியிலும் சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதையும், பல பாடல்கள் பெண்பாற் புலவர்களால் பாடப்பட்டமையையும், அகக்கண்ணைத் திறக்க உதவும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தமையால் மன்னனுக்கே அறிவுரை கூறும் வீரப் பெண்மணிகளாவும், துணிந்த நெஞ்சமுடையவர்களாகவும், சுதந்திர மனப்பான்மை உடையவராகவும், சிறந்த தூதுவர்களாகவும் தங்களை வெளிக்காட்டியுள்ளனர் என்று ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடலில் காண முடிகிறது.

"நாடா கொன்றோ! காடா கொன்றோ!

அவலா கொன்றோ! மிசையா கொன்றோ!

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை, வாழிய நிலனே!"[1] (புறநானூறு - 187)

எனினும் அன்றைய சமூகத்தில் பெண்கள் பல்வேறு வகை சமூக சிக்கல்களுக்குள்ளும் ஆளாகியதை மறுக்க முடியாது. தொல்காப்பியத்தில் பெண்ணுக்குரிய தகுதிகளாக.

"அச்சமும், நாணும், மடனும், முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"[2] (தொல்-96)

கற்புநிலை, ஒழுக்க நிலை, நன்னெறி,பிறரை உபசரித்தல் பெண்ணின் கடமை என்றனர். மற்றும் செறிவு, நிறைவு, செம்மை, ஒழுங்குறு செப்புதல், அறிவு, அருமை ஆகிய தகுதிகளும் பெண்ணிற்குரிய தகுதிகளாக (தொல்)பொருளதிகாரதாதில் காணப்படுகிறது.

"கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்

நல்லிதின் புரையும் விருந்து புறந்தருதலும்

சுற்றம் ஓம்பலும் பிறவு மன்ன கிழவோன் மான்றகல்" (தொல் - 150)

புறநானூற்றில் குழந்தையை பெற்று தருதலும் பெண்ணின் கடமையெனக் கொண்டனர்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே"[4] (புறநானூறு - 312 )

கணவனை எண்ணியிருத்தல், தலைவன் வரும்வரை அவனுக்காக காத்திருத்தல், வந்ததும் மகிழ்தல், இருவருக்குமான இல்லற வாழ்வை எண்ணி மகிழ்தல் என சங்க இலக்கியத்துள் பல பாடல்களும் பெண்ணின் செயலை தெளிவுற விளக்குகின்றது. இதனையே சங்ககாலத்தை அடுத்தக் காலகட்டங்களிலும் பின்பற்றப்பட்டன. எனவே சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்திலும் பெண்களின் உணர்வு வெளிப்படும் நிலையும், வெளிப்படாத நிலையும் தனது உரிமைகளை ஆதிக்க சமூகத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட நிலையினையும் இக்கட்டுரையின் வழி ஆராய்வதே ஆகும்.

## பெரியபுராணத்தில் பெண்கள்

சேக்கிழார் பெண்களைப் பல்வேறு தரங்களில் பிரதான பாத்திரங்களாகவும்,துணைப் பாத்திரங்களாகவும் பல உறவு முறைகளினூடாக சித்தரித்துக் காட்டியுள்ளார். கிட்டத்தட்ட பெரிய புராணத்தில் 'இருபத்தியெட்டு' மகளிர் பற்றிய செய்திகள் குறிப்பிடப்படுகின்றன.இவர்களில் நாயன்மார்களின் மனைவி இருபத்தியொரு பேரும்,தாயார் என்ற நிலையில் நான்கு பேரும், மகள் என்ற நிலையில் இருவரும், உடன் பிறந்த சகோதரி என்ற நிலையில் ஒருவருமாய் இவர்கள் பற்றிய விபரநிலைகள் அமைகின்றன. இவர்களில் காரைக்காலம்மையார், இசைஞானியார், மங்கையர்கரசியார் ஆகிய மூவரையும் தனிநிலை மாந்தர்களாக சேக்கிழார் வெளிப்படுத்துகின்றார். ஏனையோரைத் துணைநிலை மாந்தர்களாகவும், பலரைத் தோன்றா மகளிராகவும் வெளிப்படுத்தியுள்ளார். ஏனைய பெண்களில் திலகவதியார் பற்றிய செய்திகள் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் கூறப்படுகின்றது.

## பெண்களின் நிலை

"பெண்ணொன்று பூமிதனில் பிறந்து விட்டால் பெரும்

பீழை இருக்குதடி தங்கமே தங்கம்.....[5]

பாரதியார் கவிதைகள் -7

என்று பாரதி பாடியுள்ளார். தலைமுறை தலைமுறையாக பெண்ணுக்கு சமநிலையும், சில இடங்களில் முதல் நிலையும் கொடுத்திருந்த தமிழ் சமுதாய மரபு வட இந்திய மதங்களின் ஏற்பால் மாற்றம் கண்டது. கி.பி.6ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் சமண,பௌத்த மதங்கள் மேலோங்கி இருந்தன. இம் மதங்களில் குறிப்பாக சமண மதம் தமிழகத்தில் பரவலாகப் பின்பற்றப்பட்டு வந்தது.தமிழ் பக்தி இயக்கம் கி.பி. ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு முடிவு வரை தமிழகத்தில் செயற்பட்ட சமய சமூக அரசியல் இயக்கமாகும். வைணவ சமயம், சைவ சமயம் முன்னிறுத்தி அக்காலப் பகுதியில் தமிழரிடையே செல்வாக்கு பெற்றிருந்த சமண,பௌத்த சமயங்களுக்கு எதிராகவும் தமிழ் பக்தி இயக்கம் அமைந்துள்ளது. மேலும் சமண மதத்தில் பெண்கள் நேராக சொர்க்கம் போக முடியாது. என்பது அவர்களின் எண்ணமாகும். பெண்ணை விட ஆணையே சமண மதம் முன் நிறுத்தின. பெண் பிறப்பு பாவமாக எண்ணப்பட்டது. பெண்டிர் இழித்துப் பேசப்பட்டனர். பெண்ணுடன் வாழும் இல்லறவாழ்வும் குறைத்துக் கருதப்பட்டது.எனவே பெண் பின்னுக்குத் தள்ளப்பட்டாள். இதனையே பக்தி இயக்க சமயம் சமண மதத்தின் பெண் ஒடுக்கும் கருதுகோளைக் கைவசம் எடுத்துக் கொண்டது. மேலும் சங்கம் மருவிய காலத்தில் குறிப்பாக களப்பிரர் காலத்தில் சமண,பௌத்த மதங்கள் தமிழரிடையே வீரியம் பெற்றிருந்தன. அவற்றின் செல்வாக்கால் பெண் முதன்மை மற்றும் சமவாய்ப்பு இழந்திருந்தாள்.சமண, பௌத்தங்களையும் வீழ்த்தி வைதிக சமயங்கள் மேலெழுந்தன.சைவம்,வைணவம் அவற்றின் உட்பிரிவுகள். வட இந்திய வைதிக மரபை உள்வாங்கிக் கொண்டன. இதன் அடையாளங்களை சைவ நாயன்மார் பாடல்களிலும், வைணவ அடியார் பாடல்களிலும் தெளிவாக் காணமுடிகிறது. இந்நிகழ்வுகள் கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை உச்சத்தில் இருந்தன. இவ்வுச்சமானது பெண்களைத் துச்சத்திற்குத் தள்ளின. இக்காலங்களில் சைவ நாயன்மார்கள் வாழ்ந்த வாழ்க்கையை மிகுத்தும், புனைந்தும்,விரித்தும் கிபி 12-ம் நூற்றாண்டில் சேக்கிழார் திருத்தொண்டர் மாக்கதை எனும் பெரியபுராணமாக உருவாக்கியுள்ளார்.

## உரிமை பெற்றோர்

எல்லா காலக்கட்டங்களிலும் பெண்களை சமமாகவும், அவர்களின் உரிமைகளுக்கு இடம் அளிப்பதும், உணர்வுகளை மதிப்பதுமாகவும் மற்றொரு விதமாக பெண்களை இழிவுப்படுத்துவதும், உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்காமையும் என்று பெண்களை இரண்டு விதமாகவும் காணமுடிகிறது. இவ்வாறாக பெரியபுராணத்திலும் உரிமை பெற்றோரான சில பெண்களும், உரிமை இழந்தவர்களான சில பெண்களைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது. மற்றும் இந்நூலானது பல்வேறு மட்டங்களில் பல பெண்களை பற்றி கூறுகிறது. அவர்கள் அனைவரைப் பற்றி ஆய்வு செய்வது இச்சிறு கட்டுரையின் நோக்கமல்ல. இரு நிலைகளில் உள்ள பெண்களில் முக்கியமானவர்கள் சிலரை அடிப்படையாகக் கொண்டு சேக்கிழார் பெண்களை எவ்வாறு காட்டியுள்ளார் என்று பார்பதேயாகும்.

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் சில பெண்களின் வாழ்க்கையில் பல துன்பங்கள் நிலவியபோதும் சிறு சிறு உரிமைகளை பெற்றிருந்தை அறியமுடிகிறது.

மணிமுடிச்சோழனின் மகள் மங்கையர்க்கரசி ஆவார். சிவபெருமானை தன் இளம் வயதிலிருந்தே வழிபட்டு வந்தவர். பின்னாளில் பாண்டிய மன்னரான நெடுமாறபாண்டியனின் மனைவியானார். அவரோ சமணமதத்தை சார்ந்தவர்.நாட்டில் நன்மையும், அமைதியும் இல்லாமல் இருந்தது. திருஞானசம்பந்தரை பற்றி அறிந்த மங்கையர்க்கரசியார் அவரை அழைத்து பாண்டிய நாட்டில் உள்ள துயரத்தை போக்கவும் நெடுமாறபாண்டியனை சமணத்தில் இருந்து மாற்றவும் சம்பந்தரை பாண்டிய நாட்டிற்கு வரவேண்டினார்.அங்கு வந்த திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்தில் மங்கையர்கரசியாரைப் பற்றியும் பாடியுள்ளார்.மேலும் சிவநெறியினை தன் கணவரான நெடுமாறபாண்டியன் உணரும்படி செய்து அம்மன்னவனுக்கு வர இருந்த பெரும் பழியை தடுத்து நிறுத்தியதோடு மட்டுமின்றி மிகுந்த புகழோடு வாழச்செய்து சிவபெருமான் திருவடியை அடையும்

பேறுபெற்ற புண்ணியனாக மாற்றியவர். ஒரு தனி மனிதனை திருத்துவது என்பது வேறு. ஆனால் ஒரு நாட்டின் மன்னனை மாற்றுவது என்பது வேறு.தன் கணவன் செய்த அனைத்தும் சரி என்று பின்னால் செல்லாமல் சரி, தவறு எது என்று எடுத்துரைத்து கணவனாக இருப்பினும் மன்னனையும்,நாட்டு மக்களையும் மாற்றி நல்வழியில் கொண்டு சென்றார். அக்காலக்கட்டத்தில் ஒரு பெண்ணின் உணவிற்கும், சொல்லிற்கும் மதிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. நெடுமாறப்பாண்டிய மன்னன் தன் மனைவியை சமண சமயத்திற்கு மாறுமாறு வற்புறுத்தவில்லை என்பதும் அவர் சுதந்திரமாக மன்னனிடம் கூறி திருக்கோயிலுக்கு சென்றார் என்பதும் அதற்கு மன்னன் மறுப்பு ஏதும் கூறவில்லை என்பதும் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் காணப்படுகிறது.

"தொண்டர்தாம் போற்றிக் காட்டிடக்கண்டு துணைமலர்க்கரங்குவித் தருளி

மண்டுபே ரன்பால் மண்மிசைப் பணிந்து "மங்கையர்க்கரசி என்றெடுத்தே

எண்டிசைபரவும் ஆலவாயாவதிதுவே' என்றிருவர்தம் பணியும்

கொண்டமை சிறப்பித் தருளிளள்டதிகப் பாடினார் குவலயம் போற்ற."6பெரியபுராணம் - 663

மயிலாப்பூரில் சிவநேசர் என்பவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தார்.இவர் சிவபக்தராக இருந்தார். இவருக்கு பூம்பாவை என்ற மகளொருத்தி வாழ்ந்து வந்தாள். சைவ சமய தொண்டினை செய்யும் திருஞானசம்பந்தருக்கு தன்னுடைய மகளான பூம்பாவையை திருமணம் செய்து வைக்க சிவநேசர் எண்ணியிருந்தார். தன்னுடைய ஏழாம் வயதில் பூம்பாவை பாம்பு தீண்டி இறந்து விட்டார். சிவநேசர் தன்னுடைய மகளின் எலும்பு மற்றும் சாம்பலினை நீர்நிலைகளில் கரைக்காது பாதுகாத்து வந்தார். ஒருநாள் திருஞானசம்பந்தரை சிவநேசர் சந்திக்க தன்னுடைய மகளின் எலும்பு மற்றும் சாம்பலினைத்தர பூம்பாவையை பதிகம் பாடி சாம்பலில் இருந்து உயிர் பெற செய்தார். ஏழு வயதில் இறந்த பூம்பாவை பன்னிரெண்டு வயதான பெண்ணாக உயிர் பெற்ற நிலையில் பூம்பாவையை திருமணம் செய்து கொள்ளுமாறு சிவநேசர் வேண்ட தானே உயிர் கொடுத்தமையால் பூம்பாவையை திருமணம் செய்து கொள்ள இயலாது என திருஞானசம்பந்தர் மறுத்துவிட்டார். அதனால் பூம்பாவை துறவு மேற்கொண்டார். திருஞானசம்பந்தர் பூம்பாவையை திருமணம் செய்ய மறுத்த போதிலும் அவளை வேறொருவருடன் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தவில்லை என்பதும் தெரிகிறது. அவ்வாறு வற்புறுத்தியிருப்பினும் அவள் மனதிற்குப் பிடித்த ஒருவருடன் திருமணம் நடைபெறாததால் பூம்பாவைக்கு பிடித்த வண்ணம் அவள் துறவிற்கு சென்றார்.

## உரிமை இழந்தோர்

மற்றொரு நிலையில் சில பெண்கள் அவர்களின் உரிமைகளை இழந்த நிலையிலும் வாய் திறந்து தமது உரிமைகளைக் கேட்டு பெறா நிலைமையும் இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

சிவபெருமான் மீது மிகுந்த அன்பு கொண்டு வாழ்பவர் இயற்பகை நாயனார் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராவர். இவரும் இவர் மனைவியும் நாள்தோறும் சிவனடியார்களுக்கு பல தொண்டுகள் செய்து வாழ்ந்து வந்த நிலையில். ஒருநாள் சிவனடியார் ஒருவர் இயற்பகையாரின் மனைவியை கேட்க சற்றும் தன் மனைவியின் மனநிலையைப் பற்றி எதையும் சிந்திக்காமல் இவ்வாறு கேட்டது என்னுடைய பாக்கியம் என்று கூறி மனைவியை சிவனடியாருடன் அனுப்பிவைத்தார்.எனவே அக்கால பெண்கள் தன்னுடைய உள்ள உணர்ச்சியை வெளிப்படுத்தாமலும் செய்வது சரி, தவறு என்று எண்ணாமலும், அவ்வாறு தெரிந்தாலும் அதை எடுத்துக் கூற இயலாமலும், கூறுவது கணவனாக இருந்தால் சரி, தவறு என்று சிந்திக்காமல் அவ்வாறே அதை செய்பவர்களாகவும் அக்காலகட்டங்களில் சில பெண்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது.

"மாது தன்னைமுன் கொடுத்தமா தவர்தாம்

மனம கிழ்ந்துபே ருவகையின் மலர்ந்தே

யாது நானினிச் செய்பணி என்றே

இறைஞ்சி நின்றவர் தம்மெதிர் நோக்கிச்

சாதி வேதிய ராகிய தலைவர்

தையல் தன்னையான் தனிக்கொடு போகக்

காதல் மேவிய சுற்றமும் பதியுங்

கடக்க நீதுணை போதுக வென்றார்."7

தேவாரம் திருமுறை (இ)-10

தூங்கானைமாடம் சிவாலயத்திற்கு தினமும் சென்று தூய்மை செய்யும் திருத்தொண்டு செய்து வந்தவர் கலிக்கம்ப நாயனார். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவர். தினமும் சிவனடியார்களுக்கு விருந்தளிக்கும் முன்பு அவர்களின் பாதங்களை கழுவுவது வழக்கம். அவ்வாறு ஒருநாள் சிவனடியார்களின் கால்களை கழுவுவதற்கு தன் மனைவியை நீர்வார்க்கும்படி கலிக்கம்பர் சொல்ல அடியார்களின் பாதங்களை கழுவிக் கொண்டு வந்தார். அப்போது அந்த சிவனடியார்களில் ஒருவர் கலிக்கம்பர் வீட்டில் முன்பு வேலை செய்தவர். அவரை கண்ட கலிக்கம்பர் மனைவி நீரை வார்க்காமல் நின்றார். அந்த நிகழ்வை கண்ட கலிக்கம்ப நாயனார் தன் உடைவாளை உருவி தன் மனைவியின் இரு கைகளையும் வெட்டி எரிந்து. பின் அவரே நீர்வார்த்துக் கொண்டு சிவனடியார்களின் கால்களை கழுவியப் பின்னர் அவர்களுக்கு உணவினை பரிமாறினார். எனவே அப்பெண்ணானவள் கணவனால் கைவெட்டப்பட்டு வாழ்நாள் முழுவதும் அடிமையாகவே வாழ்பவளாக இருந்திருக்கின்றாள். இதனை கேட்கவும் அதனை எதிர்க்கவும் இல்லாத நிலை அக்கால பெண்களிடம் காண முடிகிறது.

"வெறித்த கொன்றை முடியார்தம்

அடியார் இவர்முன் மேவுநிலை

குறித்து வெள்கி நீர்வாரா

தொழிந்தாள் என்று மனங்கொண்டு

மறித்து நோக்கார் வடிவாளை

வாங்கிக் கரகம் வாங்கிக்கை

தறித்துக் கரக நீரெடுத்துத்

தாமே அவர்தாள் விளக்கினார்."8

தேவாரத்திருமுறை (இ)-8

இதுபோன்று கோயிலுக்கு திருவிளக்கு இட்டு வறுமையானபோது மனைவியை விற்க முனைந்தவர் கலிய நாயனார். தன் மகளின் திருமணத்தின்போது முனிவர் கேட்டதற்காக நீண்ட நெடுமலர் கூந்தலை அறுத்துக் கொடுத்தவர் மானகஞ்சார நாயனார். மேலும் சிவனடியாராக வந்த விருந்தினருக்கு பிள்ளையை வெட்டி அறுத்து கறி சமைத்துக் கொடுத்த சிறுத்தொண்ட நாயனாரின் மனைவி எனவே மேலே கூறப்பட்டுள்ள அனைத்து காரியங்களில் ஈடுபட்ட பெண்கள் யாவரும் மறுப்பு தெரிவிக்கவில்லை, மற்றும் அவர்களின் உணர்வுகளை வெளிக்காட்டவும் இல்லை. பெரிய புராணத்தில் காட்டப்பட்டுள்ள பெண்களில் பலரும் உரிமைகளை இழந்த நிலையில் வாழ்ந்துள்ளன. மற்றும் அக்காலகட்டத்தில் பெண்களின் நிலையானது கணவன் மறுமணம் செய்ததை தன் முதல் மனைவியிடம் சொல்ல தேவை இல்லை என்று எண்ணியமை, திருமணம் ஆனவர் என தெரிந்தும் ஆண்களை மனம் புரிந்தமை,கணவனால் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்து வாடியமை, விருந்தினர்காக பெற்ற பிள்ளையையே கொலை செய்தமை,வேறு

ஒருவரோடு உடன் உரைய கணவனால் பணிக்கப்பட்டமை, மனவாழ்வின் குறியீடாகவும் அழகின் அடையாளமாகவும் போற்றப் பெரும் கூந்தலை அறிந்து கொடுப்பதை பொறுத்திருந்த நிலைமை மேலும் அக்காலத்தில் பெண்களை விற்கும் பழக்கமும் இருந்தமை,விற்பதை தடுக்காது இசைவு தெரிவித்தமை, பெண்களின் கை மூக்கு அறிந்து தண்டனை அளிக்கும் வழக்கமும் இருந்தமையை காண முடிகிறது.

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் காட்டும் அனைத்து பெண்களின் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு காரணங்களினால் துன்பங்களோடு வாழ்ந்திருப்பதை காண முடிகிறது. இதில் ஒரு சில பெண்கள் சிறுசிறு உரிமைகளை பெறுபவர்களாகவும் பல பெண்கள் அடிமை நிலையில் வாழ்ந்தவர்களாகவும் உள்ளன. சமயத்தை முன்னிறுத்தும் போது இது சிறப்பானதாகத் தோன்றலாம் சமத்துவ சமுதாயம் பார்வையில் இந்நிலை சிறப்பான நிலை என்று சொல்ல முடியாது என்பதாகும்.

## References


தாயம்மாள் அரவாணன் (2001) தையல் சொல் கேளீர், பச்சைப்பசேல் 11, புதுச்சேரி-605 005

திருஞானசம்பந்தம், ச. (2018) தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு

பட்டுச்சாமி, தி. (1950) சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரிய புராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம் (பன்னிரெண்டாம் திருமுறை), திருப்பனந்தாள் காசி மடம்,

புலியூர்க் கேசிகன் (2010) புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை

மணி, டி.வி.எஸ்., விஸ்வநாதன், சீ. பாரதியார் கவிதைகள், வானவில் பிரசுரம், சென்னை

வெங்கடேசன், த. (2022) அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறு, கோச்செங்கண்ணாயனார் சிவத்தொண்டு சிவசபை, சென்னை


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License